## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## எட்டாம் பத்து

### இரண்டாம் திருமொழி - தெள்ளியீர்
### திருக்கண்ணபுரம் 2
### [தலைவியின் நிலை கண்ட தாய் தலைமகனை இயற்பழித்தும், தலைமகளது இளமைக்கு இரங்கியும் கூறிய பாசுரம்]

** தெள்ளியீர்! * தேவர்க்கும் தேவர் திருத்தக்கீர்! *
வெள்ளியீர்! * வெய்ய விழு நிதி வண்ணர் ** ஓ!
துள்ளு நீர்க் * கண்ணபுரம் தொழுதாள் இவள்
கள்வியோ! * கை வளை கொள்வது தக்கதே? 1

** நீணிலா முற்றத்து * நின்று இவள் நோக்கினாள் *
காணுமோ! * கண்ணபுரம் என்று காட்டினாள் **
பாணனார் திண்ணம் இருக்க * இனி இவள்
நாணுமோ? * நன்று நன்று நறையூரர்க்கே 2

** அருவி சோர் வேங்கடம் * நீர்மலை என்று வாய்
வெருவினாள் * மெய்யம் வினவி இருக்கின்றாள் **
பெருகு சீர்க் * கண்ணபுரம் என்று பேசினாள்
உருகினாள் * உள் மெலிந்தாள் * இது என் கொலோ? 3

உண்ணும் நாள் இல்லை * உறக்கமும் தான் இல்லை *
பெண்மையும் சால * நிறைந்திலள் பேதை தான் **
கண்ணன் ஊர் கண்ணபுரம் தொழும் * கார்க்கடல்
வண்ணர் மேல் * எண்ணம் இவட்கு இது என் கொலோ? 4

கண்ணன் ஊர் * கண்ணபுரம் தொழும் காரிகை *
பெண்மையென் * தன்னுடை உண்மை உரைக்கின்றாள் **
வெண்ணெய் உண்டு ஆப்புண்ட * வண்ணம் விளம்பினாள் *
வண்ணமும் * பொன் நிறம் ஆவது ஒழியுமே 5

வடவரை நின்றும் வந்து * இன்று கணபுரம்
இடவகை கொள்வது * யாம் என்று பேசினாள் **
மடவரல் மாதர் என் பேதை * இவர்க்கு இவள்
கடவது என்? * கண் துயில் இன்று இவர் கொள்ளவே 6

** தரங்க நீர் பேசினும் * தண் மதி காயினும் *
இரங்குமோ? * எத்தனை நாள் இருந்து எள்கினாள்? **
துரங்கம் வாய் கீண்டு உகந்தானது * தொன்மை ஊர் *
அரங்கமே என்பது * இவள் தனக்கு ஆசையே 7

தொண்டெல்லாம் நின் அடியே * தொழுது உய்யுமா
கண்டு * தான் கணபுரம் கை தொழப் போயினாள் **
வண்டுலாம் கோதை என் பேதை * மணி நிறம்
கொண்டு தான் * கோயின்மை செய்வது தக்கதே? 8

முள் எயிறு ஏய்ந்தில * கூழை முடி கொடா *
தெள்ளியள் என்பதோர் * தேசிலள் என் செய்கேன்? **
கள்ளவிழ் சோலைக் * கணபுரம் கை தொழும்
பிள்ளையை * பிள்ளை என்று எண்ணப் பெறுவரே? 9

** கார் மலி * கண்ணபுரத்து எம் அடிகளை *
பார் மலி மங்கையர் கோன் * பரகாலன் சொல் **
சீர் மலி பாடல் * இவை பத்தும் வல்லவர் *
நீர் மலி வையத்து * நீடு நிற்பார்களே 10

**அடிவரவு:** தெள்ளியீர் நீணிலா அருவி உண்ணும் கண்ணன் வடவரை தரங்கம் தொண்டு முள் கார் கரை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**